**தலைப்பு 288 – நில அளவைத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 288 – நில அளவைத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஆகஸ்ட் 30 ஆந் திகதி நில அளவையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 3,267.33 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 3,198.62 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 68.71 மில்லியன் அதாவது 2.10 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 3,026.03 | 2,966.92 | 59.11 | 1.95 |
| மூலதனம் | 241.30 | 231.70 | 9.60 | 3.98 |
| மொத்தம் | **3,267.33** | **3,198.62** | **68.71** | **2.10** |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்**

பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக திணைக்களத்திற்கு காணி அமைச்சினால் ரூபா 277 மில்லியன் கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் 254 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளில் ரூபா 23 மில்லியன் அல்லது 8 சதவீதமான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 வருமானக் கணக்குகள்

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டிற்காக 20-03-02-04 ஆம் இலக்க வருமானக் குறியீட்டிற்காக ரூபா 101 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 308 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 305 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

## 2.3 முற்பணக் கணக்கு

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 28801 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 157.33 | 110.97 | 107.33 | 123.34 | 380.00 | 317.76 |

## 2.4 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்திற்குரிய 7002/0000/00/0044/0015/000 ஆம் இலக்க கணக்கில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 2.34 மில்லியனாக இருந்தது.

## 2.5 பொது வைப்புக் கணக்கு

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் கீழான 04 பொது வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10.55 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 000/0117/0002/00/0000/6000 | 1.70 |
| 000/0077/0013/00/0000/6000 | 0.30 |
| 000/0065/0016/00/0000/6000 | 8.59 |
| 000/0143/0015/00/0000/6000 | 0.06 |
| மொத்தம் | **10.55** |

## 2.6 கணக்காய்வு அவதானிப்புக்கள்

திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தால் கீழே காட்டப்பட்டுள்ள சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | கணனி, துணைக் கருவிகள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | சேதங்கள் மற்றும் நட்டங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | நாளதுவரையாக்கப்பட்டிருக் கவில்லை |
| (iv) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 | நாளதுவரையாக்கப்பட்டிருக் கவில்லை |

### 3.2 வருமானக் கணக்குகள்

திணைக்களத் தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 20-03-02-04 ஆம் இலக்க வருமானக் குறியீட்டிற்குரிய வருமான மதிப்பீட்டைத் தயாரித்தல், வருமானத்தைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல், கணக்குகளைச் சமர்ப்பித்தல் ஆகிய செயற்பணிகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அந்த வருமானக் குறியீடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஆம் ஆண்டின் திருத்திய வருமான மதிப்பீடு ரூபா 140 மில்லியனாக இருந்தது. எனினும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் பிரகாரம் வருமான மதிப்பீடு ரூபா 101 மில்லியனாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நில அளவைக் கட்டண வருமானம் மற்றும் வைப்புக் கணக்கில் முன்கொண்டு செல்லப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை முறையே ரூபா 22 மில்லியன் மற்றும் ரூபா 167 மில்லியன் மாத்திரம் நில அளவையாளர் நாயகத்தின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன், வேறுபாடான ரூபா 62 மில்லியன் செலவினத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நில கட்டண வருமானத்தில் 73 சதவீதம் மாத்திரம் வருமானத்திற்கு செலவுவைக்கப்பட்டிருந்தது.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்குரிய முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

28801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட இடமாற்றம் பெற்றுச் சென்ற, ஓய்வுபெற்ற, மரணமடைந்த, சேவையை விட்டுச் சென்ற, வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் ஏனைய கடன் மீதிகள் ரூபா 7,096,321 கூட்டு மொத்தமாக இருந்ததுடன் அந் நிலுவை மீதிகள் 01 ஆண்டு முதல் 33 ஆண்டுகள் வரையான காலப்பகுதியாக காணப்பட்டு வந்த போதிலும், அக்கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேல்மாகாணத்தின் கணக்கு இணக்கம் செய்யும் போது ஆரம்ப மீதிக்கு ‘‘கட்டுப்பாட்டு கணக்கிற்கு குறைவாக பதிவு செய்யப்பட்டுள்ள கடன் மீதிகளை சேர்த்தல்’’ என ரூபா 503,507 சேர்க்கப்பட்டு கட்டுப்பாட்டு கணக்கு சமப்படுத்தப்பட்டிருந்தது.

### 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆம் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் நிதியாண்டு பூர்த்தியடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கை 2016 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

திணைக்களத்தினால் 2014 யூலை 31 ஆந் திகதி முதல் ரூபா 15 மில்லியன் பெறுமதியான 02 மோட்டார் வாகனங்கள் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்திற்கும், மேலும் பெறுமதி வெளிப்படுத்தப்படாத மோட்டார் வண்டியொன்று காணி அமைச்சிற்கு முறையற்ற விதத்தில் விடுவிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமாகக் காணப்பட்ட சில சொத்துக்கள் முறையான அங்கீகாரமின்றி திணைக்களத்தினால் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| சொத்துக்கள் வகை | சொத்துக்கள் உரித்தான நிறுவனம் | எண்ணிக்கை | பெறுமதி | காலப்பகுப்பாய்வு |
|---|---|---|---|---|
| ----------- | ---------------- | --------------- | ------------ | ---------------- |
| | | | ரூபா | |
| மோட்டார் வாகனங்கள் | காணி அமைச்சு | 16 | 05 வாகனங்களின் பெறுமதி ரூபா 21 மில்லியன் ஆக இருந்ததுடன் 11 வாகனங்களின் பெறுமதி வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | 2014 யூலை 24 ஆந் திகதி முதல் |
| | சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சு | 04 | வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. |

**3.6 செயலாற்றல்**

----------------------

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

------------------------------------------------------------------------------------------

திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது எல்லைக் கல் பதிக்கும் நில அளவைகளின் இலக்குகளின் எண்ணிக்கை 49,413 காணித்துண்டுகளாக இருந்த போதிலும், அது செயலாற்றல் அறிக்கையில் 42,859 காணித்துண்டுகள் நில அளவை செய்யப்பட்டிருந்தமையால் செயன்முன்னேற்றம் 87 சதவீதமாக காணப்பட்டன.

(ஆ) பொறியியலாளர் நில அளவைகளின் இலக்கு 4,180 ஹெக்டேயர் காணித் துண்டுகளாக இருந்த போதிலும், செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 1,550 ஹெக்டேயர்கள் மாத்திரம் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் செயன்முன்னேற்றம் 37 சதவீதமாக காணப்பட்டன.

(இ) நீதிமன்ற கட்டளை நில அளவைகளின் இலக்கு 10,200 ஆக இருந்த போதிலும், செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 7,425 துண்டுகள் மாத்திரம் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் செயன் முன்னேற்றம் 73 சதவீதமாக காணப்பட்டன.

(ஈ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 2009 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை எஞ்சிய அளவீட்டுக் கட்டளைகளின் எண்ணிக்கை 22,941 ஆக இருந்தது. கடந்த ஏழு ஆண்டுகளில் எஞ்சிக் காணப்பட்ட நில அளவீட்டுக்

கட்டளைகளின் எண்ணிக்கை 22,941 ஐ பூர்த்தி செய்வதற்கு விசேட திட்டமொன்று திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொண்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவ்வாறு அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் சில காண்பிக்கப்படிருந்தன.

**அரச கொள்வனவு வழிகாட்டல் கோவையிலிருந்து விலகிச் செயற்படுதல்**

**(அ) "டோடல் ஸ்டேஷன்" (Total Station) கொள்வனவு**

திணைக்களத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 23.36 மில்லியன் செலவு செய்து ''டோடல் ஸ்டேஷன்'' (Total Station) கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) இதற்காக 06 நிறுவனங்களிடமிருந்து கேள்விகள் சமர்ப்பிப்பட்டிருந்தன. அதில் 3 நிறுவனங்களால் வழங்கப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன், அவ்வாறு நிராகரிப்பதற்கு பின்வரும் காரணங்கள் அடிப்படையாக கொள்ளப்பட்டிருந்தன.

- அரச கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.8.1(ஈ) வழிகாட்டலின் பிரகாரம் வெளி மதியுரையாளரொருவரின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளாமல் உறுதிப்படுத்தல் பரிசோதனை (Demonstration) அடிப்படையாக கொள்ளப்பட்டிருந்தது.
- துணை உபகரணங்களில் பல்வேறு பிழைகள் இருப்பதாக குறிப்பிட்டிருந்தமை மற்றும் நியமப்படுத்தப்பட்ட உபகரணங்களில் வித்தியாசங்கள் காணப்பட்டமை, அந்த உபகரணங்களின் பெறுமதியை 3 சதவீதத்திற்கு குறைத்து காட்டியிருந்தமை.
- Dust and water protection இன் பெறுமதி 55 என்ற ''டோடல் ஸ்டேஷன்'' (Total Station) திணைக்களத்தினால் இதற்கு முன்னர் கொள்வனவு செய்திருந்த போதும் இம்முறை அப்பெறுமதி 65 சதவீதம் என பரிந்துரைக்கப்பட்டிருந்தது.
- 4 ஆம் 5 ஆம் வருடங்களுக்காக பராமரிப்பு கிரயமொன்று கோரப்பட்டிருந்ததுடன் கேள்விதார்கள் அதனை மறைமுகமாக சமர்ப்பித்திருந்தமை.
- சில கேள்விதாரர்களினால் பராமரிப்பு உட்பட 05 ஆண்டுகக்கு முழுமையான உத்தரவாதச் சான்றிதழை வழங்கியிருந்த போதிலும் அவ்விலை மனுக்களும் நிராகரிக்கப்பட்டிருந்தன.
- Keyboard, Alpha Numeric keyboard அல்லது Touch panel both faces இல்லையென குறிப்பிடப்பட்டிருந்தும் சில விலை மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன.

மேற்குறித்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த கேள்வி நிராகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டில் 25 ‘‘டோடல் ஸ்டேஷன்’’ (Total Station) கொள்வனவின் போது தொழில் மதியுரைக் குழுவினால் இத்தொழில்நுட்ப விதந்துரைப்புக்கள் அகற்றப்பட்டிருந்தன. மேலும் இந்த விதந்துரைகளை பூர்த்தி செய்யாத Trimble வகையிலான ‘‘டோடல் ஸ்டேஷன்’’ (Total Station) இதற்கு முன்னர் திணைக்களத்திற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் கம்பனியால் உபகரண பராமரிப்புக் கிரயமாக ரூபா 6,048,000 எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கூறுவிலை மதிப்பீட்டிற்காக அக்கிரயம் கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) திணைக்களம் கொள்வனவு செய்திருந்த Soccia CX Series வகையிலான ‘‘டோடல் ஸ்டேஷன்’’ (Total Station) மற்றும் Topcon ES – 103 வகையான ‘‘டோடல் ஸ்டேஷன்’’ (Total Station) விதந்துரைப்புக்கள் அனைத்தும் ஒரே மாதிரியாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இரண்டு வகையான ‘‘டோடல் ஸ்டேஷன்’’ (Total Station) ஆக இருந்த போதிலும், அதன் உற்பத்தி கம்பனிகள் இரண்டும் ஒரு கம்பனியின் தாய்க் கம்பனியாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும் Topcon ES – 103 வகையிலான ‘‘டோடல் ஸ்டேஷன்’’ (Total Station) குறைந்த விலையில் முன்வைக்கப்பட்டிருந்த போதிலும், அக்கேள்வியும் நிராகரிக்கப்பட்டிருந்தது.

(iv) தெரிவுசெய்யப்பட்ட வழங்குனருக்கு குறைந்த விலை விபரங்களைச் சமர்ப்பித்த 04 போட்டி நிறுவனங்களினதும் விலை விபரங்கள் மேலே குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் அடிப்படையாக கொள்ளாமல் நிராகரிக்கப்பட்ட காரணத்தினால் திணைக்களம் ரூபா 3,591,000 கூடுதலாகச் செலுத்தியிருந்தது.

(v) உள்நாட்டு வழங்குனர்களின் இயலுமை மட்டுப்படுத்தப்படும் போது சர்வதேச போட்டி கேள்வி கோருதல் சாதகமாக தோன்றும் போது அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 3.1 வழிகாட்டி பிரகாரம் சர்வதேச ரீதியாக கூறுவிலை கோருவதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டிய போதிலும் அதற்காக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஆளில்லாமல் பிரயாணிக்கக் கூடிய சிறிய அளவிலான விமானமொன்றைக் கொள்வனவு செய்தல் (Unman Aerial Vehicle) (U.A.V)**

---

ஆளில்லாமல் பிரயாணிக்கக் கூடிய சிறிய அளவிலான விமானமொன்று ரூபா 8,868,500 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) திணைக்களத்தினால் இவ்வாறான தொழில்நுட்பமொன்றைப் பயன்படுத்தி அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வது முதலாவது சந்தர்ப்பமான போதிலும் அது தொடர்பாக சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) முதலாவது தடவை கொள்வனவு செய்யப்பட்ட கூறுவிலை கீழே காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிராகரிக்கப்பட்டிருந்தது.

- விதந்துரைப்புக்களை தயாரிக்கும் போது குறிப்பாக அந்த விமானத்திற்கு இருக்க வேண்டிய தொழில்நுட்ப நியமங்கள் உரிய வகையில் வரைவிலக்கணப்படுத்தாமை.

- சமர்ப்பிக்கப்பட்ட கூறு விலைகளில் பாரிய விலகலொன்று காணப்பட்டது.
- பெறுகைகளுக்காக அவ்விடயம் தொடர்பாக தொழில்நுட்ப விசேடமல்லாத இரண்டு உத்தியோகத்தர்களால் விதந்துரைப்புக்கள் தயாரித்திருந்தமை.

- தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு மற்றும் உத்தியோகத்தர்களால் அவ்வாறான விமானமொன்றினை பௌதீக ரீதியாக பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுத்தமைக்கான பரிந்துரை.

- விதந்துரைப்புக்களில் பராமரிப்புக் காலம் இரண்டு ஆண்டுகள் என திருத்தம் செய்வதற்காக மற்றும் RTK option உள்ளடக்கப்பட்டிருந்தமை.
- நிதிஏற்பாட்டு எல்லை மிகைத்தமை.

(iii) 2015 யூலை 16 ஆந் திகதி கேள்விதாரர் கம்பனிகளுக்கு மீண்டும் கூறுவிலைகளை அனுப்புமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. முதலாவது கேள்வி சமர்ப்பித்த 04 கேள்விதாரர்கள் இரண்டாவது தடவை கூறுவிலைகளைச் சமர்ப்பித்திருக்கவில்லை. அதற்காக விதந்துரைகள் மாற்றப்பட்டிருந்தமை, ஒரு மாதத்திற்குள் பொருளை சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்ற புதிய நிபந்தனையொன்று விதிக்கப்பட்டிருந்தமை, முதலாவது கூறுவிலை திறக்கும் போது விலை விபரங்கள் பகிரங்கப்படுத்தப்பட்டமையால் இரகசியம் மீறப்பட்டமை போன்ற விடயங்கள் அதற்காக தாக்கமளித்திருந்தன.

(iv) முதலாவது கேள்வி கூறுவிலை கோருவதற்குரிய விதந்துரைப்புகளின் 09 உருப்படிகள் மாத்திரம் மாற்றப்பட்டிருந்ததுடன், இவ்வாறு விதந்துரைகள் மாற்றுதல் சில கேள்விதார்களை போட்டியிலிருந்து அகற்றுவதற்கு அல்லது அதைரியப்படுத்துல் காரணமாக இருந்தது.

(v) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 4.2.2 மற்றும் 4.2.3 வழிகாட்டிகளில் ஆரம்பத்திலிருந்து இறுதி வரை ஒவ்வொரு பெறுகை செயற்பாடுகளில் கட்டம், கால ரீதியில் விபரிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. முதலாவது விலை விபரங்கள் கோரும் போது கட்டளை கிடைத்து 03 மாதங்களுக்குள் பொருட்கள் வழங்கப்பட வேண்டுமெனவும் இரண்டாவது தடவை விலை கோரும் போது ஒரு மாதத்திற்குள் பொருட்கள் வழங்கப்பட வேண்டுமென மாற்றப்பட்டமையால் போதியளவு காலமொன்று கிடைக்காதமையால் அநேகமான கேள்விதாரர் இரண்டாவது தடவை கூறுவிலைகளைச் சமர்ப்பித்திருக்கவில்லை. எனினும் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரருக்கு கட்டளையிட்ட திகதி முதல் பொருட்களை கொண்டு கையளிப்பதற்காக 03 மாத காலம் வழங்கப்பட்டிருந்தது.

(vi) மேற்குறித்த நிலைமை இரண்டாவது தடவை இரண்டு போட்டி நிறுவனங்களால் மாத்திரம் கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. தெரிவு செய்யப்பட்ட வழங்குனருடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போட்டி கூறுவிலை RTK option விதந்துரை இல்லாத அறிக்கை நிராகரிக்கப்பட்டிருந்தது. இந்த RTK option விதந்துரை இரண்டாவது கூறுவிலை கோரலின் போது அறிமுகப்படுத்தப்பட்ட விதந்துரையாக இருந்ததுடன், அப்பரிந்துரை போட்டி கேள்விதாரர்களுக்கு இல்லையென கண்டறியப்பட்டதன் பின்னர் அதனை அடிப்படையாகக் கொண்டு கேள்வி நிராகரிக்கப்பட்டிருந்தமை.

(vii) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.8.1(ஆ) வழிகாட்டியின் பிரகாரம் விடய விசேடத்துவ நிபுணர் ஒருவர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2.8.1(இ) வழிகாட்டியின் பிரகாரம் தேவையான சந்தர்ப்பங்களில் விசேடத்துவ ஆலோசனைகளை வெளியிலிருந்து பெற்றுக்கொள்ள முடியுமான போதிலும், அதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) திணைக்களத்தின் தொழில்நுட்ப உபகரணங்கள் தொடர்பாக பொறியியல் சார்ந்த அறிவுடன்கூடிய உத்தியோகத்தர்கள் இல்லையெனின் அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.8.1(இ) வழிகாட்டியின் பிரகாரம் கேள்வி ஆவணங்களை வரைவதற்காக வெளி மதியுரையாளர்களின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ix) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 3.3.1(அ) வழிகாட்டியின் பிரகாரம் உள்நாட்டு வழங்குனர்களிளதும் சேவை வழங்குனர்களினதும் இயலுமையை மட்டுப்படுத்தப்படும் வகையில் சர்வதேச போட்டிக் கேள்வி முறைமை செயற்படும் இயலுமை ஆராயப்பட்டிருக்கவில்லை.

(x) விமானத்தைக் கொள்வனவு செய்த கம்பனி, நிள அளவைத் திணைக்களத்திடமிருந்து ஓய்வுபெற்ற நில அளவையாளர் ஒருவர் அவரது மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளுக்கு உரித்தான கம்பனியாக இருந்ததுடன், இந்த ஓய்வுபெற்ற நில அளவையாளரின் உறவுமுறையான மகளும் திணைக்கள பெறுகைகள் மற்றும் வழங்கல் பிரிவின் நிலஅளவை அத்தியட்சகரொருவராக சேவை புரிகின்றார். மீளாய்வாண்டின் போது ரூபா 63 மில்லியனுக்கு அண்மித்த பெறுமதிக்கு வழங்கல் மற்றும் சேவைகளை இந்நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. இந்நிலைமை முரண்பாடாக காணப்பட்டமை (Conflict of interests) குறிப்பிடலாம்.

(xi) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 1.2(ஊ) வழிகாட்டலின் பிரகாரம் மதிப்பீடு மற்றும் தெரிவு செயற்பாடு வழிகாட்டலின் வெளிப்படையான தன்மை மற்றும் நிரந்தர தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் 1.2 (ஈ) வழிகாட்டியின் பிரகாரம் தகைமையுடைய அக்கரை செலுத்தும் தரப்பினருக்கு பெறுகைக்கு சமூகமளிப்பதற்காக நியாயமான, சமமான மற்றும் கூடிய சந்தர்ப்பங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனினும் இந்நிலைமைகள் இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு தடையாக காணப்பபட்டது.

**(இ) கனொபி கொள்வனவு**

-------------------------------------

திணைக்களத்தின் கெப் வண்டிக்காக கனொபி பொருத்துவதற்காக கேள்வி கோரப்பட்டிருந்தது. அக்கேள்வி கோருவதற்கு முன்னர் அதற்கான விதப்புரைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது திணைக்களத்தின் 09 கெப் வண்டிகளுக்காக 04 மாதங்களுககுள் ரூபா 113,200 முதல் ரூபா 253,680 வரையான விலை விலகல் அடிப்படையில் தனியார் நிறுவனமொன்றிடமிருந்து கனொபி பொருத்துவதற்காக ரூபா 1.9 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

**(ஈ) காலி மற்றும் புத்தளம் நில அளவையாளர் அலுவலகங்களை நிர்மாணித்தல்**

------------------------------------------------------------------------------------------------------------------------காலி மற்றும் புத்தளம் நில அளவையாளர் அலுவலகங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 29 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இந்நிர்மாணத்திற்குரிய மதிப்பீட்டை தயாரிப்பதற்கு முன்னர் கூறுவிலை கோரப்பட்டு பெறுகை ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

**(உ) பெறுகைத் திட்டம்**

மீளாய்வாண்டில் பெறுகை திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்ட ரூபா 34.6 மில்லியன் பெறுமதியான பொருட்கள் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்படாமல் இருந்ததுடன் பெறுகைகள் திட்டத்திற்கு உள்ளடக்கப்படாத ரூபா 23 மில்லியன் பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

**3.9 நட்டங்களும் சேதங்களும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்டதன் பிரகாரம் 25 ஆண்டுகளை விட பழமையான 09 வகைகளுக்குரிய 222.5 கிலோ கிராம் 19 போத்தல்கள் Positive Remover பூச்சுக்களும் Plate cleaner 45 அழிவடைந்திருந்தன. இவற்றின் பெறுமதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இரண்டு வாகன விபத்துகளுக்குரிய ரூபா 124,025 தொகையான நட்டம் பதிவழிக்கப்பட்டுள்ளதாக ஒதுக்கீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்காக நிதிப் பிரமாணம் 109 இன் பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) விபத்துக்களினால் ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்காக உரிய காலப்பகுதியில் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையால் பல வருடங்களாக இருந்து வரும் 12 வாகனங்களுக்கு ஏற்பட்ட நட்டங்களிலிருந்து ரூபா 622,832 தொகையை புத்தங்களிலிருந்து பதிவழிப்பதற்கு மீளாய்வாண்டின் போது திணைக்களம் நடவடிக்கை எடுத்து வந்தது.

**3.10 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்டதன் பிரகாரம் பல வருடங்களுக்கு தேவைப்பாட்டிற்கு போதுமாகும் இருப்புக்கள் 2015 சனவரி 01 ஆந் திகதி களஞ்சியத்தில் காணப்பட்ட போதிலும், 2015 ஆகஸ்ட் 25 ஆந் திகதி அது தொடர்பாக கருத்திற் கொள்ளாமல் ரூபா 5.6 மில்லியன் பெறுமதியான லினோ கடதாசி கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட முழு இருப்பும் 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் களஞ்சியத்திலிருந்து விநியோகிக்கப்படாமல் தடுத்துவைக்கப்பட்டிருந்ததுடன் அக்கொள்வனவு திகதிக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட லினோ கடதாசி இருப்புக்களும் அத்திகதியில் களஞ்சியத்தில் எஞ்சியருந்தன.

**3.11 முகாமைத்துவ பலவீனங்கள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஊக்குவிப்பு படிகள் செலுத்தும் போது நில அளவையாளர் ஒருவர் மாதாந்தம் நிறைவேற்றப்படவேண்டிய ஆகக்குறைந்த வேலைகளின் அளவு (Monthly Norms) தீர்மானிக்கப்பட்டிருந்தும் ஒரு மாதத்திற்கு ஊக்குவிப்பு படிகள் செலுத்துவதற்காக செய்யப்பட வேண்டிய உச்ச அளவான காணித்துண்டுகளின் எண்ணிக்கை அல்லது தொடக்கச் சம்பளத்தின் சதவீதமாகச் செலுத்தக்கூடிய எல்லை தீர்மானிக்கப்பட்டிருக்காததுடன் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டுவரை ஊக்குவிப்பு படியும் மேற்பார்வைக் கட்டணமும் செலுத்தப்பட்டிருந்தன. அதற்கிணங்க,

ஊக்குவிப்பு படியும் மேற்பார்வைக் கட்டணமுமாக மாத்திரம் அவர்களின் வருடாந்த அடிப்படைச் சம்பளத்தைப் போல் இரண்டு மடங்கையும் மிகைத்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மிகவும் முன்னேற்றகரமான தொழில்நுட்ப உபகரணங்கள் உட்பட செயற்கை கோள் மற்றும் கணனி தொழில்நுட்பம் ஆகியற்றைப் பயன்படுத்துவதன் காரணமாக நில அளவை வேலைகளில் செயற்திறன் அதிகரிக்கப்பட்டிருந்தன. அந்நிலைமையைக் கருத்திற் கொள்ளாமல் முப்பது ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த முறைமையை அடிப்படையாகக் கொண்டு நில அளவையாளர் ஒருவரினால் ஒரு மாதத்திற்கு நில அளவை செய்யவேண்டிய ஆகக்குறைந்த காணித்துண்டுகளின் எண்ணிக்கை 30 என்ற எல்லைக்கு வரையறுக்கப்பட்டிருந்தது. இந்த எல்லையின் கீழ் அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்வதை அடிப்படையாகக் கொண்டு ஊக்குவிப்பு படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

(இ) களஞ்சியப் பொருட்களுக்கு விண்ணப்பிக்கும் போது பொருளை பொறுப்பேற்ற நபரின் பெயர் மற்றும் பதவிகள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. பொருட்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் கையொப்பமிடப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் சில பொருட் கோரலின் 03 பிரதிகளும் களஞ்சியத்தில் வைத்திருந்கப்பட்டிருந்தன.

(ஈ) இலகுவாகவும் தாமதமின்றியும் தவறுகளை சரி பார்க்ககூடிய வகையில் பொறுப்பில் இருக்கும் பொருட்கள் திருப்திகரமாக களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் பொருட்களை வழங்கும் போது FIFO முறைமை பின்பற்றப்படாதிருந்ததுடன் 2007 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 69,000 பெறுமதியான 03 Lazer printer cartridge காலாவதியடைந்திருந்தன.

## 3.12 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 1,185 | 920 | 265 | -- |
| (ii) | மூன்றாம் நிலை | 117 | 79 | 38 | -- |
| (iii) | இரண்டாம் நிலை | 1,349 | 1,019 | 333 | 03 |
| (iv) | ஆரம்ப நிலை | 4,852 | 4,081 | 772 | 01 |
| | மொத்தம் | 7,503 | 6,099 | 1,408 | 04 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த 04 மிகை ஊழியர்கள் தொடர்பாக முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 389 அளவீட்டுத் துறை உதவியாளர்கள் வேறு நடவடிக்கைகளுக்காக இணைக்கப்பட்டிருந்தனர்.

| இணைக்கப்பட்டிருந்த அலுவலகம் | எண்ணிக்கை |
|---|---|
| பிராந்திய அலுவலகங்களுக்காக | 19 |
| மாவட்ட அலுவலகங்களுக்காக | 149 |
| தியதலாவ | 157 |
| தலைமை அலுவலகத்திற்காக | 64 |
| மொத்தம் | 389 |

(iii) நிழற்பட பிரதி இயந்திர செயற்பாட்டாளராக அங்கீகரிக்கப்படாத பதவியொன்றுக்கு ஊழியரொருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தார்.

**(ஆ) முறையற்ற விதத்தில் வேறு தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் போது ஏனைய தரப்பினருக்கு முறையற்ற விதத்தில் விடுவிக்கப்பட்ட மனித வளங்கள் தொடர்பான விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| ஊழியர் வகை | எண்ணிக்கை | ஏனைய தரப்பினர் | விடுவிக்கப்பட்ட காலப்பகுதி |
|---|---|---|---|
| சிரேஷ்ட வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 01 | எல்லை நிர்ணய ஆணைக்குழு | 2015.03.15 ஆந் திகதி முதல் 2020.03.14 ஆந் திகதி வரை |
| அரச நில அளவையாளர் | 22 | காணி ஆணையாளர் அலுவலகம், மாகாண காணி ஆணையாளர் அலுவலகம், பிரதி காணி ஆணையாளர் அலுவலகம், உதவி காணி ஆணையாளர் அலுவலகம், காணி சீர்திருத்த ஆணைக்குழு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் புகையிரத திணைக்களத்திற்கும் இணைக்கப்பட்டிருந்தனர். | 2006, 2007, 2010, 2012, 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டு களில் இருந்து இதுவரை |

| | | | |
|---|---|---|---|
| அளவீட்டு வெளிக் கள உதவியாளர்கள் | 11 | காணி ஆணையாளர் திணைக்களம், | 1988, 1989, 1998, 2003, 2006 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் இருந்து இதுவரை |
| | 31 | புகையிரத திணைக்களம் | 1996, 1998, 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் இருந்து இதுவரை |
| | 03 | இலங்கை தரைப்படை சேவை | 1996 மற்றும் 1997 ஆம் ஆண்டுகளில் இருந்து இதுவரை |